**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 257/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. நிர்மலா ராணி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு. பாரிவள்ளல்** | **Calling** | : | **தலைமை ஆசிரியர் (ஓய்வு)** |
| **Village** | : | **NGO காலனி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **66** |
| | | | **Dated** | : | **10.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திருமதி. நிர்மலா ராணி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவை நான் தான் எழுதினேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. என்னுடைய மகன் எழில்மாறன் M.Sc. (IT) முடித்துவிட்டு, வேலைக்காக சில கம்ப்யூட்டர் கேர்ஸ் படிப்பதற்காக என்னிடம் படம் வாங்கிக் கொண்டு, குடித்துவிட்டு நண்பர்களோடு சுற்றும் பழக்கம் வைத்திருந்தார். 07.02.2011ம் தேதி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் இருந்து

எனக்கு மாலை 06.00 மணியளவில் போன் வந்தது. எழில்மாறன் அரசு மருத்துவமனையில் இருப்பதாகவும், உடனே வரச்சொல்லியும் சொன்னார்கள். நான் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்குப் போனேன். என் மகன் தலையில் 25 வெட்டுக்காயங்கள் மற்றும் கழுத்து அறுபட்ட நிலையில் உடம்பிலும் காயங்களோடு மிகவும் கவலைக்கிடமான நிலையில் அனுமதிக்கப்பட்டு இருந்தார். நண்பர்களோடு ஏற்பட்ட தகராறில் கோஸ்டி மோதலில் என் மகனை வெட்டிவிட்டதாக போலீசார் சொன்னார்கள். பின்னர் என் மகனை மேல் சிகிச்சைக்காக மதுரை, அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் கொண்டு சொன்றோம். மறுநாள் காவல் நிலையம் வந்து அவர்கள் சொல்ல சொல்ல இந்த புகார் மனுவை எழுதினேன். போலீசார் சொல்லித்தான் எனக்கு சம்பவம் பற்றித் தெரியும். எனக்கு என் மகனின் நண்பர்களையும் தெரியாது. அவரை அடித்தவர்கள் பற்றியும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைத்தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல சொன்ன நாள், நேரத்தில் குற்ற நிகழ்வு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் போலீசார் சொல்லிக் கொடுத்தபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 10.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.10 17:13:43 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 257/2025**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. எழில்மாறன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பாரிவள்ளல்** | **Calling** | : | **சூப்பர்வைசர், மெட்டுர் டிரான்ஸ்போர்ட்** |
| **Village** | : | **NGO காலனி** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **41** |
| | | | **Dated** | : | **10.02.2026** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**1 மற்றும் 2 எதிரிகள் ஆஜர்.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 2), **திரு. எழில்மாறன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் சென்னை, மெட்டுர் டிரான்போர்ட் கம்பெனியில் சூப்பர்வைசராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியாது. 07.02.2011 ம்தேதி கோவில் திருவிழாவில் நண்பர்களோடு சேர்ந்து இருந்தபோது, வாய் தகராறு ஏற்பட்டு தள்ளிவிட்டதில் எனக்கு அடிபட்டது. என்னை யார் அடித்தார்கள் என்று நேரடியாகத் தெரியாது. செல்வம் என்ற பையனும், வில்லியம்ஸ் என்ற பையனும் அடித்ததாக ஊர் பெரியவர்கள் சொன்னார்கள். எனக்கு அடிபட்ட பிறகு சுயநினைவு இல்லை. என்னை மருத்துவமனையில்

சேர்த்தார்கள். பிறகு சிகிச்சை முடிந்து வந்துவிட்டேன். போலீசார் என்னை மயக்கமாக இருந்தபோது விசாரித்தார்கள். பிறகு எதிரிகளை கைது செய்துவிட்டோம் என்று கூறி என்னிடம் கையொப்பம் வாங்கிவிட்டு, பிறகு விசாரிக்கவில்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைத்தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல சொன்ன நாள், நேரத்தில் குற்ற நிகழ்வு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் போலீசார் சொல்லிக் கொடுத்தபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in open court on 10.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA Digitally signed by V DEEPA Date: 2026.02.10 17:14:00 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.